NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 17 April 2017

# நுணுக்கங்கள் நிறைந்த தமிழ் எழுத்து உருவாக்கம்

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத் தமிழர் பேரவை 2012ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்த உலகத் தமிழ் மாநாட்டின் தலைப்புச் சின்னத்திற்காக நடத்தப்பட்ட வடிவமைப்புப் போட்டியில் முதன் முதலாகப் பங்கேற்ற ஜே.எஸ்.சசிகுமார் வெற்றி பெறவில்லை.

இருப்பினும், சசிகுமாரின் வடிவமைப்பைப் பார்த்த அவாண்ட் நாடகக் குழுவின் இயக்குநர் செல்வா, தமது நாடகங்களுக்கான தலைப்புகளையும் சுவரொட்டிகளையும் வடிவமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

தமிழ் எழுத்துருக்களை தொடர்ந்து வடிவமைப்பதற்கு அது அடித்தளமாக அமைந்தது.

அப்போதுதான் தமிழ் எழுத்துருவியல், வடிவமைப்பு ஆகியவற்றின் அடிப்படைகளை சசிகுமார் கற்றுக்கொண்டார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த பிறகு அங்கு தமிழர் பேரவையின் நிகழ்ச்சிகளுக்கும் சென்ற ஆண்டு நடைபெற்ற தமிழ் மொழி மாநாட்டிற்கும் தேவையானவற்றை வடிவமைத்துக் கொடுத்தார் சசிகுமார், 25.

இவ்வாண்டு மேடையேற இருக்கும் 'சங்கே முழங்கு' நாடக நிகழ்ச்சிக்கான வடிவமைப்பு வேலைகளிலும் ஈடுபட்டுள்ளார் உயிரியல் துறை மாணவரான சசிகுமார்.

"எழுத்துருவியல் படைப்புகளை உருவாக்கும்போது எழுத்துகளுக்கு இடையிலான இடைவெளி, பயன்படுத்தப்பட வேண்டிய வண்ணங்கள், படிப்பவர்களின் ரசனைத்தன்மை ஆகியவற்றை கருத்தில்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்," என்றார் சசிகுமார்.

'சங்கே முழங்கு' நாடகப் படைப்பின் தலைப்பை எழுத்துருவில் வடிவமைத்தபோது, அந்த இரண்டு சொற்களுக்கே கிட்டத்தட்ட நூறுவகையான எழுத்துருவங்களை கணினியில் வரைந்ததாகக் கூறிய அவர், இறுதியாக, அதிலிருந்து இரண்டு எழுத்துருவங்களை ஏற்பாட்டுக் குழுவினர் தேர்வு செய்தனர் என்றார்.

"எழுத்துருக்களை வடிவமைக்கும்போது எழுத்துருவியலுக்கு கையெழுத்து அழகாக இருக்க வேண்டியதில்லை. அனைவரும் படிப்பதுபோல இருந்தாலே போதுமானது. ஆனால் அந்த எழுத்துரு காண்போரைக் கவரும் வண்ணம் இருத்தலும் கருத்துடன் ஒன்றி இருத்தலும் அவசியம்," என்று வடிவமைப்பிற்கு அடிப்படையான அம்சங்கள் குறித்துச் சொன்னார் சசிகுமார்.



தமிழ் எழுத்துருக்களின் வடிவாக்கத்தில் ஈடுபட்டிருக்கும் ஜே.எஸ்.சசிகுமார். அவரது படைப்பில் விளைந்த சில எழுத்துருக்கள் (வலது படங்கள்). **படங்கள்: திமத்தி டேவிட், சசிகுமார்**

தொடக்கத்தில் பொழுதுபோக்கிற்காக ஆங்கிலத்தில் மட்டும் எழுத்துருவியல் படைப்புகளை உருவாக்கி வந்த சசிகுமார், வளைவு நெளிவுகளோடு இயல்பாகவே அழகு படைத்த தமிழ் எழுத்துக்களிலும் அத்தகைய படைப்புகளை உருவாக்க முனைந்தார்.

"என்னை தனிப்பட்ட விதத்தில் கவர்ந்த பாடல் வரிகள், பிரபலமான சில பாடல் வரிகள், எனது கவிதை வரிகள் போன்றவற்றை எழுத்துருவியல் படைப்புகளாக உருவாக்கியுள்ளேன்," என்ற அவர், தமது எழுத்துருக்களை சமூக ஊடகங்களிலும் பதிவேற்றம் செய்கிறார்.









"பொதுவாக, தமிழ் எழுத்துருவியல் அவ்வளவாக இல்லை. சமூக ஊடகங்களில் பெரும்பாலான பதிவேற்றங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. அவற்றுடன் ஒப்பிடுகையில் தமிழ் எழுத்துருவியல் படைப்புகள் தனித்துவத்துடன் பார்வையாளர்களை ஈர்க்கும் விதத்தில் அமைந்துள்ளன என்பது திண்ணம்," என்கிறார் சசிகுமார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.